## முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்.

## O.S.No.60/2021 (O.S.6/2022)

PW1 ஆமினாபீ நாள் 02.08.2023

**1, 2 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

இல்லை.

**3, 4 ஆம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1 ஆம் பிரதிவாதி என் மகள். 2 ஆம் பிரதிவாதி என் 1 ஆம் பிரதிவாதியின் மகள். 1,2 வாதிகள் 1 ஆம் பிரதிவாதியின் பிள்ளைகள். வாதிகள் இருவரும் பள்ளியில் படிக்கிறார்கள். வெண்கலம் பள்ளியில் படிக்கிறார்கள். நான் கிருஷ்ணாபுரத்தில் குடியிருக்கிறேன். வெண்கலம் கிராமத்திற்கும் என்னுடைய ஊருக்கும் சுமார் 10 கி.மீ தூரம் இருக்கும். என்னுடைய மகள் வெண்பாவூர் கிராமத்தில் வசிக்கிறார். வெண்பாவூருக்கும் வெண்கலம் பள்ளிக்கும் இடையே 2 கி.மீ தூரம் இருக்கும். வாதிகள் இருவரும் அவருடைய தாயாருடன் தான் இருந்து படிக்கிறார்கள் என்றால் தவறு, என்னுடன் தான் இருந்து படிக்கிறார்கள். பேருந்திற்கு தினமும் ரூ.20/- செலவாகும். நான் தற்போது வீரகனூரில் குடியிருக்கிறேன். நான் தாவா போடும்போது வீரகனூரில் தான் குடியிருந்தேன். வீரகனூரில் அரசுப்பள்ளி இருக்கிறது. பன்னிரண்டாம் வகுப்பு வரையில் உள்ள பள்ளி உள்ளது. வீரகனூரில் உள்ள பள்ளிக்கும் எனது வீட்டிற்கும் 2 பர்லாங்கு தூரம் இருக்கும். நான் விவசாய வேலை செய்கிறேன். எனக்கு தினமும் ரூபாய் 200/- கிடைக்கும். இந்த வழக்கு சொத்துக்களைப்பொறுத்து இன்னொரு வழக்கு நடப்பது எனக்கு தெரியாது. பழனிவேல் என்பவரைத் தெரியும். அவரை இந்த வழக்கில் 4 ஆம் பிரதிவாதியாகச் சேர்த்துள்ளேன். பழனிவேல், என்னுடைய மகள், பேத்தி, பேரன்கள் மீது வழக்கு போட்டுள்ளது எனக்கு தெரியாது. நானும், என் மகளும்

நல்ல உறவு முறையில் தான் இருக்கிறோம். இன்று நீதிமன்றத்திற்கு என் மகளுடன் தான் வந்தேன். அவர் தான் என்னைக் கூட்டிவந்தார். அவர்களும் இன்னொரு வழக்கு இருப்பது பற்றி எனக்கு சொல்லவில்லை. என் மருமகன் குடும்பம் ஊரில் மரியாதையான குடும்பம் என்றால் சரிதான். என் மருமகன் ஒரு மீன் பண்ணை ஆரம்பித்தார். அதில் தான் வியாபாரம் செய்தார். மீன் பண்ணை ஆரம்பிக்க ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவில் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரிதான். கடன் பெற்றது ரூபாய் 7,50,000/- என்றால் சரிதான். கடனை செலுத்தாதனால் வங்கி சொத்துகள் மீது நடவடிக்கை எடுத்தது என்றால் சரிதான். என் மகள் கடனுக்காக சொத்துக்களை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல. நான் செல்லாது என்று சொல்லும் கிரையப்பத்திரத்தை படித்து பார்த்துள்ளேன். 3, 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையைப் பற்றி எனக்குதெரியாது. அவர்கள் ரூபாய் 6,00,000/- க்கு கிரையம் வாங்கியதாகச் சொல்லியுள்ளார்கள் என்றால் அவர்கள் கிரையம் எதுவும் வாங்கவில்லை. என் மகள் மைனர்களுக்கு கார்டியனாக இருந்து ரூபாய் 3,97,000/- மதிப்புள்ள விவசாய நிலம் வாங்கியது எனக்கு தெரியாது. பாப்பாத்தி என்பவரை எனக்கு தெரியாது. என் மகள் விற்ற சொத்துக்களின் தொகையில் ரூபாய் 4,41,290/- க்கு நிலம் கிரையம் வாங்கியது பற்றி என் மகள் என்னிடம் சொல்லவில்லை. 26.07.2021 இல் செய்யப்பட்ட கிரையம் தான் செல்லாது என்று சொல்கிறேன். அந்த சமயத்தில் என் மகளிடம் ரொக்கப்பணம் எதுவும் கிடையாது. 11.08.2021 இல் ரூபாய் 4,41,290/- செலவில் என் மகள் தன் பெயரிலும் தன் பிள்ளைகள் பெயரிலும் நிலம் கிரையம் வாங்கியது பற்றி என் மகள் என்னிடம் சொல்லவில்லை. வங்கி வரைவோலை மூலமாகத்தான் கிரையத்தொகை என் மகளுக்கு ரூபாய் 6,00,000/- கொடுத்தார்கள். இதைத்தவிர என் மகளுக்கு வேறு சொத்துக்களும் உள்ளது. அவை என் மகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். என் மகள் நல்ல குணமான பெண் என்றால் சரிதான். அவருக்கு கெட்ட பழக்கம் எதுவும் இல்லை. இந்த வழக்கில் மட்டும் தான் என்

பேரன்களுக்கு நான் அடுத்த சிநேகிதியாக இருந்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன். பழனிவேல் தாக்கல்செய்த வழக்கில் என் மகள் தான் என் பேரன்களுக்கு கார்டியனாக இருக்கிறார் என்றால் சரிதான். அவர் தான் அந்த வழக்கை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். சிநேகா கருமந்துறையில் இருக்கிறார். சிநேகாவிற்கும் வங்கி கடன்கள் நிறைய இருந்தன. கிரைய ஒப்பந்தங்கள் மற்றும் கிரையத்திற்கு பிறகு தான் சிநேகா கடனைக் கட்டினார் என்றால் சரிதான். சிநேகா 3 ஆம் பிரதிவாதியிடம் வங்கி மூலமாக ரூபாய் 4,00,000/- பணம் பெற்று கடனை செலுத்தினார் என்றால் சரிதான். என் மகளுக்கும் பேரன்களுக்கும் வேறு சொத்துக்கள் உள்ளன. என் மருமகன் மீன் பண்ணை வைப்பதற்கு ரூபாய் 7,50,000/- கடன் வாங்கியிருந்தார். அதை செலுத்தாததால் மொத்தம் ரூபாய் 41,00,000/- கடன் வசூல் செய்ய வங்கி நடவடிக்கை எடுத்தது என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகளுடன் என் மகளும் சேர்ந்து போய் வங்கியில் பேசி அசல் தொகை மட்டும் செலுத்துவதாகச் சொல்லி ரூபாய் 7,50,000/- செலுத்தினார் என்றால் சரிதான். அதன் பெயரில் தான் சொத்துக்கள் வங்கி கடனில் இருந்து மீண்டு வந்தது என்றால் சரிதான். தற்போது சொத்துக்களின் மீது கடன் உள்ளதா என்று எனக்கு தெரியாது. மேற்படி கடனை செலுத்தாமல் இருந்திருந்தால் எல்லா சொத்துக்களும் கடனுக்கே போயிருக்கும் என்றால் சரிதான். மைனர் பிள்ளைகள் என்னுடன் இருக்கவில்லை என்றும், மகள் வீட்டில் தான் இருக்கிறார்கள் என்றும் சொன்னால் சரியல்ல, என் வீட்டிலும் இருப்பார்கள், மகள் வீட்டிலும் இருப்பார்கள். நான் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றும், எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றும் சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை.